நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 68 /2020

## P.W. 3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | மணி |
| கிராமம் | : | மாதையன்குட்டை |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 3** |
| வயது | : | 51 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 10–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 05.17PM

1. நான் தற்போது மேச்சேரி கிழக்கு பிரிவு உதவி பொறியாளராக மின்சார வாரியத்தில் பணிபுரிந்து வருகிறேன். யானை இறந்து சம்பந்தமாக எனக்கு எழுத்துபூர்வாக தகவல் தெரிவிக்கவில்லை. போன்மூலமாக தான் தகவல் சொன்னார்கள். நான் முதல் விசாரணையில் கைப்பற்றி வைத்திருந்ததாக

சொன்ன ரீப்பர் கட்டை மற்றும் கம்பிகள் கைப்பற்றும்போது நான் அங்கு இல்லை.

2. என்னிடம் சம்பவத்து அன்று எவ்வளவு மணிநேரம் மின்சாரம் தடைபட்டிருந்தது என்பது பற்றி மட்டும்தான் கேட்டிருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்த மின்சார இணைப்பில் குறிப்பாக எந்த இடத்தில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு மின்சாரம் எடுக்கப்பட்டது என்பதை கண்டறிய ஆய்வு மேற்கொள்ள என்னிடம் யாரும் சொல்லவில்லை.
3. சாதாரணமாக ஒரு மின்சார இணைப்பில் உள்ள மின்சாரம் தாக்கபடும்போது மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருந்த இடத்தில் தீப்பிடித்து எரிந்ததற்கான தடயம் இருக்கும் என்றால் சிலநேரம் இல்லாமலும் இருக்கலாம். நான் பார்க்கும்போது அவ்வாறான எந்த தடயங்கள் எதுவும் அந்த இடத்தில் இல்லை. என்முன்னிலையில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்த பெட்டியில் இருந்து யானை கிடந்த இடத்திற்கு இடையேயான தூரத்தை அளந்து பார்க்கவில்லை.
4. அ.சா.ஆ 9a மற்றும் 9b ஆவணத்தில் நான் சொன்ன சங்கதிகள் உண்மை இல்லை என்றால் சரியல்ல. வனத்துறையினர் கேட்டுக்கொண்தற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ 9a ஆவணத்தில் குறிப்பிட்ட எந்த மின்மாற்றிக்கு எவ்வளவு நேரம் எவ்வளவு மின்சாரம் கொடுத்தோம் என்று துணை மின்நிலையம் இருந்தால்தான் கண்டறிய முடியும் என்றால் சரிதான். கொளத்தூரில் அதற்கான துணை மின் நிலையம் உள்ளது.
5. அந்த துணை மின்நிலையத்தில் ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை மின்மாற்றிக்கு கொடுக்கப்படும் மின்சார அளவு பதிவு செய்யப்படும். அந்த பதிவேட்டை நான் இந்த வழக்கில் ஒப்படைக்கவில்லை. மேற்படி காரணங்களால் அ.சா.ஆ 9a மற்றும் 9b ஆகிய நான் வழங்கிய சான்றிதழ்கள் அறுதியிட்ட சான்றுகள் அல்ல என்றால் சரியல்ல.( **மேற்படி இரண்டு ஆவணங்களுக்கும் ஒரே எண் என கண்டறிய பட்டு 9a மற்றும் 9b ஆக திருத்தம் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது)**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–05.38PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை**

செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.